# 21-12-2024 செய்தி

## மாதவ் காட்கிலுக்கு ஐ.நா.வின் உயரிய விருது

- மேற்கு மலைத் தொடரைப் பாதுகாக்க வேண்டும் என அறிவியல்பூர்வமாக அறிக்கையை முன்வைத்த சூழலியலாளர் மாதவ் காட்கிலுக்கு ஐ.நா.வின் உயர்ந்த சுற்றுச்சூழல் விருது அறிவிக்கப்பட்டுள்ளதும்.
- சாம்பியன்ஸ் ஆஃப் தி எர்த் என்றழைக்கப்படும் இந்த விருது மேற்கு மலைத் தொடர் குறித்த விரிவான ஆய்வை முன்வைத்த குழுவிற்கு அவர் தலைமை வகித்ததற்காக அறிவிக்கப்பட்டுள்ளது.
- மேற்கு மலைத் தொடர் யுனெஸ்கோவின் உலக மரபு இயற்கைத் தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. உலக உயிரப்பன்மை செழிப்பிடங்களில் ஒன்றாகவும் கருதப்படுகிறது.
- மேற்கு மலைத் தொடர் சூழலியல் நிபுணர் குழுவின் தலைவராக மாதவ் காட்கில் செயல்பட்டிருந்தார். சூழலியல் ரீதியில் எளிதில் சிதைந்துவிடக்கூடிய பகுதியான மேற்கு மலைத் தொடரில் மக்கள்தொகை அதிகரிப்பால் ஏற்படும் அழுத்தம் காலநிலை மாற்றும், வளர்ச்சி நடவடிக்கைகள் குறித்து இந்தக் குழு ஆராய்ந்தது.
- 2011 இல் சமர்ப்பிக்கப்பட்ட இந்தக் குழுவின் அறிக்கை மேற்குமலைத் தொடரை மூன்று சூருணர்வு மண்டலங்களாகப் பிரித்து, அவற்றின் அடிப்படையில் வளர்ச்சி நடவடிககைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் எனக் கூறியது.
- கனிமச்சுரங்கம் தோண்டுதல், பாறை வெட்டுதல், புதிய அனல் மின் நிலையங்கள், நீர் மின் நிலையங்கள், பெரிய அளவிலான காற்றாலைகள் போன்றவற்றைக் கூருணர்வு மண்டலம் 1 இல், தடை செய்ய வேண்டும் என்றது.
- இந்த அறிக்கையின் பரிந்துரைகளைக் கேரளம், கர்நாடகம் உள்ளிட்ட மாநில அரசுகள், தொழிற்சாலைகள் உள்ளூர் மக்கள் கடுமையாக எதிர்த்தனர். இந்த எதிர்ப்பால் காட்கில் குழுவின் அறிக்கை கைவிடப்பட்டு ராக்கெட் விஞ்ஞானி கே.கஸ்தூரிரங்கன் தலைமையில் மற்றொரு குழு அமைக்கப்பட்டது.
- மேற்கு மலைத் தொடரைச் குழு கூருணர்வுப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென ஜூலை 2024 வரை ஐந்து வரைவு அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- ஆனால், மாநில அரசுகள் எவற்றையுமே ஏற்கவில்லை, அதேநேரம், கேரளத்தின் 2018 தொடங்கி தொடர்ச்சியாக மலைச்சரிவும் இயற்கைப் பேரழிவுகளும் நிகழ்த்துவருகின்றன.
- காட்கில் குழுவின் பரிந்துரைகளை நடைமுறை படுத்தியிருந்தால், இந்தப் பேரழிவுகளின்போது மக்கள் உயிரையும் உடைமைகளையும் குறிப்பிட்ட அளவுக்காவது காப்பாற்றியிருக்க முடியும்.

## பல்லுயிர் பாரம்பரியத் தலத்தில் டங்ஸ்டன் சுரங்கமா?

**முதல் பல்லுயிர்ப் பாரம்பரியத் தலம்**

- பொ.ஆ.மு.(கிமு) மூன்றாம் நூற்றாண்டு முதல் பொ.ஆ. (கி.பி.) 17ஆம் நூற்றாண்டு வரையிலான தொடர்ச்சியான ஆதாரப் பூர்வமான வரலாற்றைக் கொண்டது.
- அரிட்டாபட்டி இந்த ஊரில் 2200 ஆண்டு காலப்பழமையான குடைவரைக் கோயில், தொடர்ச்சியான ஏழு சிறுகுன்றுகள். 72 ஏரிகள். 200 இயற்கைக் குளங்கள், மூன்று தடுப்பணைகள் போன்றவை இருக்கின்றன.
- உலகில் உள்ள பறவைகளில் வேகமாகப் பறக்கக்கூடியது சிவப்பு வல்லூறு என்று அழைக்கப்படும் ஷாஹீன் பால்கன். மணிக்கு 389 கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கக்கூடிய இந்தச் சிவப்பு வல்லூறு மதுரை மாவட்டத்தில் மேலூர் தாலுகாவில் உள்ள அரிட்டாபட்டிக்கு வருகிறது.
- அழிந்து வரும் அரிய வகைப் பறவையினமான லகுடு வல்லூறு இந்தியாவில் ராஜஸ்தான், அரிட்டாபட்டி ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே தென்படுகிறது. இந்தியாவின் முதல் ராணுவ விமானத்திற்கு அரிய வகை ராஜாளிக் கழுகின் பெயரே சூட்டப்பட்டது. இந்த அரிய வகை ராஜாளிக் கழுகுகள் அரிட்டாபட்டி குன்றுகளில் வாழ்கின்றன.

- இந்த ஊரைச் சுற்றி அமைந்துள்ள ஏழு குன்றுகளில் 20 வகையான கழுகு இனங்கள் வாழ்ந்துவருகின்றன. இப்படி அரிட்டாபட்டி, சுற்றுவட்டாரப் பகுதிகளின் பல்லுயிர்ச் சிறப்பைப் பற்றிச் சொல்லிக்கொண்டே போகலாம்.
- வரலாற்று முக்கியத்துவமும் பல்லுயிர் முக்கியத்துவமும் வாய்ந்த அரிட்டாபட்டியை அங்கீகரிக்கும் வகையில் அக்கிராமத்தை தமிழக அரசு தமிழ்நாட்டின் முதல் பல்லுயிர்ப் பாரம்பரியத் தலமாக 2022ஆம் ஆண்டு அறிவித்துள்ளது.

**டங்ஸ்டன் சுரங்கம்**

- இந்த ஊரை மையமிட்ட டங்ஸ்டன் திட்டம் சார்ந்த சமீபத்திய அறிவிப்புகளும் முன்னெடுப்புகளும் மதுரை மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. அரிட்டாபட்டி, சுற்றியுள்ள ஏழு குன்றுகள்.
- அருகில் இருக்கும் ஊர்கள் என்று 5,000 ஏக்கர் பரப்பளவில் டங்ஸ்டன் எடுப்பதற்கான சுரங்கம் அமைக்கும் பணிக்காக ஸ்டெர்லைட் நிறுவனத்தை நடத்தும் வேதாந்தா நிறுவனத்தின் துணை நிறுவனமான ஹிந்துஸ்தான் ஜிங்க் நிறுவனத்தினை மத்திய அரசு தேர்வு செய்துள்ளது.
- வரலாற்றுப் புராதனச் சின்னங்கள். பல்வேறு அறிய உயிரினங்கள் வாழக்கூடிய பல்லுயிர் தலத்திற்கு இப்படி ஒரு பெரும்.
- அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பது சூழலியல் ஆர்வலர்கள் மத்தியில் அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது. இதற்கு எதிராக மேலூர் தாலுகாவில் உள்ள 48 பஞ்சாயத்துகளைச் சேர்ந்த கிராம மக்கள் ஒன்றிணைந்து போராடத் தொடங்கியுள்ளனர்.

**மக்கள் எதிர்ப்பு**

- டங்ஸ்டன் கனிமத் திட்ட எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கம்பூர் செல்வராஜ் கூறுகையில், "டங்ஸ்டன் சுரங்கம் ஏற்படுத்தப்படுவதற்கு 20 ஆவணங்கள் பல்வேறு அரசுத் துறைகளிடம் இருந்து பெற வேண்டியுள்ளது.
- அதில் ஒன்று கிராமசபைத் தீர்மானம், சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்றை மாநில அரசு கொடுக்க வேண்டும்.
- இதுவரை மாநில அரசின் எந்தத் துறைக்கும் அது சார்ந்த விண்ணப்பம் வரவில்லை என்று தமிழ்நாடு அரசு கூறுகிறது. அரிட்டாபட்டி, சுற்றியுள்ள பகுதியில் இருக்கக்கூடிய நில அளவு, சூழலியல் தகவல்கள், மக்கள்தொகை எண்ணிக்கை, தொழில் சார்ந்த தகவல்கள் தொகுக்கப்பட்டு மதுரை மாவட்ட நிர்வாகம் சார்பாக ஆய்வு அறிக்கை மாநில அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- அந்த அறிக்கையின் அடிப்படையில் தமிழக முதல்வர் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.
- இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் தமிழ்நாட்டின் முதல் பல்லுயிர்ப் பாரம்பரியத் தலமான அரிட்டாபட்டி அழியும். சுற்றுச் சூழல் முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பகுதியில் சுரங்கம் அமைக்கப்பட்டால் இயற்கை நீர்ச்சுனைகள் வற்றிப்போகும்.
- இப்பகுதியின் உயிர்ப்பன்மை பாதிக்கப்படும், சூழலியல் சமநிலை பாதிக்கப்படும். சுரங்கப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் வேதிப் பொருள்கள் மண்ணையும் நீர்நிலைகளையும் மாசுபடுத்தும்.
- சுரங்கத்திலிருந்து வெளியேற்றப்படும் கந்தக அமிலம், நீரில் உள்ள அமில-கார சமநிலையைக் குறைக்கும். இதன் காரணமாக அந்தப் பகுதியில் உள்ள தண்ணீர் பயன்படாத நீராக மாறிவிடும். காற்று மாசுபடும்.
- எல்லாவற்றையும்விட ஐந்தாயிரம் ஏக்கர் பரப்பளவில் விவசாயத்தை நம்பி இருக்கக்கூடிய உள்ளூர் மக்களை அவர்களின் இடத்தை விட்டு விரட்டுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.
- டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்குத் தமிழ்நாடு அரசு எந்த அனுமதியும் அளிக்கக்கூடாது என அரிட்டாபட்டி, சுற்றியுள்ள 48 கிராமங்களின் கிராம சபைகளில் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது" என்றார்.

## 55-ஆவது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம்

- தில்லியில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் 54-ஆவது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் நடைபெற்றது.
- இதில் ஆயுள் மற்றும் மருத்துவக் காப்பீடுகளுக்கு விதிக்கப்படும் ஜிஎஸ்டி தொடர்பான விவகாரங்களை முழுமையாக ஆராய்வதற்கு பீகார் துணை முதல்வர் சாம்ராட் செளத்ரி தலைமையில் 13 பேர் கொண்ட அமைச்சர்கள் குழுவை ஜிஎஸ்டி கவுன்சில் அமைத்தது.
- இந்தக் குழு ஆயுள் மற்றும் மருத்துவக் காப்பீடுகளுக்கு விதிக்கப்படும் ஜிஎஸ்டி விகிதத்தை மறு ஆய்வு செய்து அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில், அந்தக் காப்பீடுகளுக்கான தவணை தொகை மீதான ஜிஎஸ்டியை குறைப்பது குறித்து அடுத்த ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என்று நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.
- இந்நிலையில் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில் 55-ஆவது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் சனிக்கிழமை நடைபெற உள்ளது.
- இந்தக் கூட்டத்தில், அந்தக் காப்பீடுகளுக்கான தவணை தொகை மீதான ஜிஎஸ்டியை குறைப்பது குறித்து முடிவு எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- விலை உயர்ந்த கைக்கடிகாரங்கள், காலணிகள் மீதான ஜிஎஸ்டியை அதிகரிப்பது உள்பட சுமார் 148 பொருள்கள் மீதான ஜிஎஸ்டி விகிதத்தை மாற்றியமைப்பது ஜிஎஸ்டி வரம்புக்குள் விமான எரிபொருளை கொண்டுவருவது குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட வாய்ப்புள்ளது.